சேலம் மத்திய மாவட்ட தி.மு.க செவ்வாய்ப்பேட்டைகோட்டை பகுதி தி.மு.க சார்பில் கழக அரசின் 4 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட கழக செயலாளர். இரா. இராஜேந்திரன் தலைமை வகித்தார். பகுதி செயலாளர். சி.பிரகாஷ் வரவேற்று பேசினார். இக்கூட்டத்தில். கழக அமைப்புச் செயலாளர். ஆர். எஸ். பாரதி கலந்து கொண்டு பேசினார். மற்றும் கழக சட்டத்துறை இணைச்செயலாளர் சூர்யா வெற்றிக்கொண்டான் மற்றும் மாவட்ட நிர்வாகிகள். ஜி.கே.சுபாசு. மு.கார்த்திகேயன் ஓமலூர் தொகுதி பொறுப்பாளர். ஈ.ஜி.சுகவனம். மாவட்ட நிர்வாகிகள். ஜி.கே. சுபாசு. மு.கார்த்திகேயன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள். கே.டி.மணி, தாமரைக்கண்ணன் பொதுக்குழு உறுப்பினர்கள் சா.சுப்பிரமணி, ஏ.அமான். மாநகர நிர்வாகிகள். ப. ரகுபதி .கணேசன். ஷெரீப். 'கேபிள் சரவணன் இப்ராகிம். மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

உதகை நகர கழகம் சார்பில், நகரக் கழக செயலாளர் எஸ்.ஜார்ஜ் ஏற்பட்டின் BLA 2, BDA ஆகியோரை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட திமுக அலுவலகத்தில் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அரசு கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட கழக பொறுப்பாளர் கே எம் ராஜு ஆகியோர் கலந்துகொண்டு கழக உறுப்பினர் சேர்க்கையை தலைமை கழகம் நிர்ணயித்த சதவிகிதத்தை அதிகம் சேர்த்துள்ள 20 க்கு மேற்பட்ட பூத் ஏஜெண்டுகள், BDA ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்து சிறப்பு பரிசுகள் வழங்கினார்கள். மேலும் வாக்குச்சாவடிகளில் அதிகமாக உறுப்பினர்களை சேர்க்கும் வாக்குச்சாவடிகளுக்கு சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட உள்ளது. இந்நிகழ்ச்சியில் ஜே. ரவிக்குமார், காமராஜ், வாணிஸ்வரி, ஜே..எஸ்.ரமேஷ், கார்டன் கிருஷ்ணன், ரீட்டா மேரி, மோகன் குமார், மஞ்சு குமார் மற்றும் கழக நிர்வாகிகள், தோழர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தபடி

இன்று 18 தமிழ்நாடு நாள் விழா! : சென்னையில் நடைபெறுகிறது!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் - போட்டியில் வென்றவர்களுக்குப் பரிசு வழங்குகிறார்!

சென்னை, ஜூலை 18-

தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு எனப் பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டிய ஜூலை 18ஆம் நாளினை தமிழ்நாடு நாளாக இனிக் கொண்டாடப்படும் என நேற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 30.10.2021 அன்று அறிவிக்கப்பட்டவாறு இன்று (18.07.2025 வெள்ளிக்கிழமை), சென்னை, திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் அரங்கம், முத்தமிழ்ப் பேரவையில் தமிழ்நாடு நாள் விழா கொண்டாடப்படவுள்ளது.

தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய ஜூலை 18ஆம் நாளினை தமிழ்நாடு நாளாக இனிக் கொண்டாடப்படும் என முதலமைச்சர் அவர்களால் 31.10.2021ஆம் நாளன்று அறிவிக்கப்பட்டு தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி இவ்வாண்டு தமிழ்நாடு நாள் விழா 18.07.2025 அன்று சென்னை, திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் அரங்கம், முத்தமிழ்ப் பேரவை மன்றத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள் வரவேற்புரையும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், முன்னிலையுரையும் ஆற்றுகின்றனர்.

அதனைத் தொடர்ந்து மரு.ஜெ. இராஜமூர்த்தி தலைமையில் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. "பேரறிஞர் அண்ணாவும் தமிழும்" என்ற தலைப்பில் வழக்கறிஞர் த. இராமலிங்கம் "இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு" என்ற தலைப்பில் கலைமாமணி திருமதி தேச மங்கையர்க்கரசி "இமய நெற்றியில் எழுதுக தமிழ்நாடு" என்ற தலைப்பில் கவிஞர் நெல்லை ஜெயந்தா "தமிழ்நாடு என்றால் தனியின்பம் தானே" என்ற தலைப்பில் திருமதி ரேகா மணி கருத்துரையாற்றுகின்றனர்.

திருமதி தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி. மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

அமைச்சர் மு.பெ சாமிநாதன் தமிழ்நாடு நாள் விழாவை முன்னிட்டு மாநில அளவில் கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற நாமக்கல் மாவட்டம் மா. அப்ரின் என்ற மாணவிக்கு ரூ.50,000/க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் இரண்டாம் பரிசு பெற்ற திருப்பத்தூர் மாவட்டம் கி.க. ஜெயஸ்ரீ என்ற மாணவிக்கு ரூ.30,000/ க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் மூன்றாம் பரிசு பெற்ற கள்ளக்குறிச்சி மாவட்டம் இ. மேகதர்ஷினி என்ற மாணவிக்கு ரூ.20,000/க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற நாமக்கல் மாவட்டம் பெ. ஜீவகனி என்ற மாணவனுக்கு ரூ.50,000/க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் இரண்டாம் பரிசு பெற்ற திண்டுக்கல் மாவட்டம் இர. முத்து மீனாட்சி என்ற மாணவிக்கு ரூ.30,000/ க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் மூன்றாம் பரிசு பெற்ற திருநெல்வேலி மாவட்டம் ல. ஹரிஹர சுதன் என்ற மாணவனுக்கு ரூ.20,000/ க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் வழங்கியும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 100 பேருக்கு நிதியுதவி ஒப்பளிப்பு அரசாணை வழங்கி விழாப் பேருரையாற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் திருமதி கு.ப. சத்தியபிரியா நன்றி கூறுகிறார்.

தஞ்சை மாவட்டம், மானம்பாடியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டமுகாம்!

அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்றார்!

தஞ்சை, ஜூலை 18-

முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அருகே உள்ள மானம்பாடி ஊராட்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாமில் கலந்து கொண்ட மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்தார்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மு.நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், துணை மேயர் சுப. தமிழழகன், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், கும்பகோணம் சார் ஆட்சியர் ஹிருத்யா எஸ். விஜயன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இம்முகாமில் உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள், மக்களின் குறைகளை வீட்டிற்கே சென்று கேட்டறிந்து தீர்வு காணும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ், இன்று முதல் நவம்பர் 2025 வரை மாநிலம் முழுவதும் 10,000 முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவித்திருந்தார். முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்த விவரங்களுடன், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெற தகுதியுள்ள, விடுபட்ட பெண்கள் அனைவரும் விண்ணப்பிக்கலாம் என்ற விவரமும் தன்னார்வலரால் தெரிவிக்கப்படுகிறது. முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்படுகிறது.

"உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்களின் மீது, உடனடியாகத் தீர்வு கிடைக்கக்கூடிய இனங்களில் உடனடியாகத் தீர்வு காணப்படும். பிற இனங்களில் அதிகபட்சமாக 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஜூலை 15 முதல் நவம்பர் 15 வரை 4 கட்டங்களாக 353 முகாம்கள் நடைபெற உள்ளன. முதற் கட்டமாக இன்று முதல் ஆகஸ்ட் 14 வரை 120 முகாம்கள் நகர்பகுதியில் 45 முகாம்களும், ஊரகப்பகுதிகளில் 75 முகாம்களும் நடைபெற உள்ளன. 313646 வீடுகளுக்கு 802 தன்னார்வலர்களால் 15.07.2025 முதல் 14.08.2025 வரை நடைபெறும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்படி, மக்களின் குறைகளை தீர்க்க "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தில் நகர்புறங்களில் 45 முகாம்கள் கிராம புறங்களில் 75 முகாம்கள் ஆக மொத்தம் 120 முகாம்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஜூலை 15 முதல் ஆகஸ்ட் 14 வரை நடைபெறவுள்ளது. நகர்ப்புறங்களில் 13 துறைகள் மூலம் 43 சேவைகளும் கிராமப்புறங்களில் 15 துறைகள் மூலம் 46 சேவைகளுக்கான மனுக்கள் பெற்று 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும். எனவே, பொதுமக்கள் அனைவரும் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர்கள் ஜெ.சுதாகர், சுந்தரஜெயபால், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் ஜி.கே.எம்.ராஜா, டி..ஆர்.அனந்தராமன், எஸ். முருகன், சமூக பாதுகாப்புத் திட்டம் தனித்துணை ஆட்சியர் பெ.மணிமாறன், திருவிடைமருதூர் வட்டாட்சியர் ஆர்.சாந்தமீனா, கும்பகோணம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இரா.இராசன், எஸ்.சாமிநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் கிழக்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 பிறந்தநாள் மற்றும் கழக அரசின் நான்காம் ஆண்டு சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் த.விக்னேஷ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தலைமைக் கழக பேச்சாளர் மு.விஜயரத்தினம், கழக இளம் பேச்சாளர் மு.ராமமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், பொதுக்குழு உறுப்பினர் சுமதி கருணாநிதி, ஒன்றிய கழக பொறுப்பாளர் நா.கணேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

ஜூலை 30- அன்று

இளங்கலை மருத்துவம், பல் மருத்துவப் பட்டப்படிப்புகளுக்கு கலந்தாய்வு!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஜூலை 18-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 16.07.2025 அன்று சைதாப்பேட்டை, 140வது வார்டு, சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.5.25 கோடி மதிப்பீட்டில் நவீன கலையரங்கம் கட்டுமானப் பணி, ரூ.3.55 கோடி மதிப்பீட்டில் ரெட்டிக்குப்பம் சாலை மற்றும் கோடம்பாக்கம் சாலையில் 455 மீட்டர் மழைநீர் வடிகால் வாய் கட்டுமானப் பணி மற்றும் 142வது வார்டு, திடீர் நகரில் ரூ.61 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் ஓரக்கல்வாய் கட்டும் பணியினை தொடங்கி வைத்து ஆய்வு செய்தார்.

பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இளங்கலை மருத்துவப் பட்டப்படிப்பு கலந்தாய்வு தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இளங்கலை மருத்துவம்/BDS பல் மருத்துவப் பட்டப்படிப்புகளுக்கு கடந்த ஜூன் மாதம் 06 ஆம் தேதியிலிருந்து ஜீன் 29 ஆம் தேதி வரை பெறப்பட்டது. அதில் 72,743 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. இந்த விண்ணப்பங்கள் ஆய்வு செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விண்ணப்பங்களில் ஒரு சில விண்ணப்பங்கள் சான்றிதழ்களை இணைக்க மறந்து விண்ணப்பத்திருப்பார்கள், அவர்களுக்கான கால அவகாசம் இரண்டு நாட்கள் வழங்கப்பட்டது. இந்த இரண்டு நாட்களில் எந்தெந்த மாணவர் எந்தெந்த சான்றிதழ்களை இணைக்கவில்லையோ அதனை இணைப்பதற்குரிய கால அவகாசமாக 2 நாட்கள் தரப்பட்டது. வழங்கப்பட்டிருக்கும் 2 நாட்களில் சான்றிதழ்களை இணைத்து மீண்டும் தந்தால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு தகுதி பட்டியல் வெளியிடப்படும். தகுதி பட்டியல் சரிபார்க்கப்பட்டிருக்கும் போது 20 பேருடைய போலிச் சான்றிதழ்கள் இருப்பது கண்டறியப்பட்டது. 20 மாணவர்கள் தங்களுடைய சான்றிதழ்கள் போலியாக விண்ணப்பத்திருக்கிறார்கள். எனவே அந்த 20 மாணவர்களுக்கும் கலந்தாய்வில் கலந்து கொள்வதற்குரிய தகுதி நீக்கம் செய்யப்படவிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல் 3 வருடங்களுக்கு கலந்தாய்வில் கலந்து கொள்வதற்கு தடை செய்யப்பட்டிருக்கிறது. அது மட்டு மல்லாமல் இவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் தொடர இருக்கிறது. 20 மாணவர்களில் 7 மாணவர்கள் பிறப்பிட சான்றிதழ்களை போலியாக தந்திருக்கிறார்கள். 9 மாணவர்கள் பிறப்பிட சான்றிதழ்கள் மற்றும் சாதிச்சான்றிதழ்களை போலியாக தந்திருக்கிறார்கள். 4 மாணவர்கள் NRI தகுதிக்கான தூதரக சான்றிதழ்களை போலியாக தந்திருக்கிறார்கள். ஆக போலியான சான்றிதழ்களை வழங்கிய 20 மாணவர்களுக்கு சட்ட ரீதியான நடவடிக்கையும், 3 ஆண்டுகள் கலந்தாய்வில் கலந்து கொள்வதற்கும் தடை விதித்தும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. ஆக இந்த சான்றிதழ்களை சரிபார்ப்பதற்குரிய இறுதி நாளாக 18.07.2025 காலை 10 மணி வரை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

IRT மற்றும் முன்னாள் இராணுவத்தினர் பரிசீலினை தற்போது நடந்து வருகிறது. அவர்களுக்கும் 2 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட உள்ளது.

இந்த சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலினை முடிந்து, இறுதி பட்டியல் வருகின்ற 25.07.2025 காலை 10 மணிக்கு வெளியிடப்பட உள்ளது. இந்த பட்டியல் வெளியிடப்பட்டவுடன் ஒன்றிய அரசின் கால அட்டவணைப்படி 30.07.2025 அன்று முதல் கலந்தாய்வு நடத்தப்படவிருக்கிறது என்று அமைச்சர் மா.சுப்பிரமணி யன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

தருமபுரி கிழக்கு மாவட்ட துணைத் தலைவர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நியமனம்!

சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!

தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சுற்றுச்சூழல் அணி துணைத் தலைவர் எம்.நாகராஜன் மறைவெய்திய காரணத்தால் **முனைவர் வி.மலையமான், பி.எச்டி.,** (4/18, மாரியம்மன் கோவில் தெரு, சத்திரம் மேல வீதி, தருமபுரி - 636 701.) அவர்கள் மாவட்ட துணைத் தலைவராகவும் -, மாவட்ட துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்ட கே.தீர்த்தராமன், ஜி.முருகன், சேட்டு (எ) பிரபாகரன் ஆகியோரை அவர்கள் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, அவர்களுக்குப் பதிலாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் **தருமபுரி கிழக்கு மாவட்ட துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.**

துணை அமைப்பாளர்கள் - ஆர்எம். வெற்றிவேல், 1/154, ராஜாகொல்லஅள்ளி, பி.அக்ரஹாரம் வழி, தருமபுரி - 636 813. எஸ்.பாரதிதாசன், 1, ஜடையன் வீதி, 7வது வார்டு, குப்பா தெரு, தருமபுரி - 636 701. எஸ். கார்த்திக் 5/144, நல்லாகவுண்டனஅள்ளி, சோகத்தூர் அஞ்சல், தருமபுரி வட்டம் - மாவட்டம்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகளுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்" **கார்த்திகேய சிவசேனாபதி,**
நாள் : 16-07-2025. செயலாளர்,
சென்னை - 18. தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சுற்றுச்சூழல் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனத்தில் திருத்தம் செய்யப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ளவர்கள் சென்னை மேற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களாக பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

தலைவர் - மெய். சண்முகம் 8, புத்திபேகம் தெரு, கோபாலபுரம், சென்னை - 600 086.

துணைத் தலைவர் - நே.திருமாறன், 118, முத்தையா தெரு, தேனாம்பேட்டை, சென்னை-600086.

அமைப்பாளர்- **பா.சுந்தரராமன்,** டைமண்ட கேட், 37, அபிபுல்லா சாலை, தியாகராயர் நகர், சென்னை - 600 017.

துணை அமைப்பாளர்கள் - செ.நா. எல்லப்பன், 31/15, இராஜாஜி 3வது தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-600034. எஸ். மணிவண்ணன், 2, எம்.எம்.காலனி, அமைந்தகரை, சென்னை-600029. கோ.க. தினகரன், 62/117, திருவள்ளுவர் தெரு, க்யூ பிளாக், எம்.எம்.டி.ஏ.காலனி, அரும்பாக்கம், சென்னை-600106. ரா. பாஸ்கர், 24/12, சைவ முத்தையா தெரு, இராயப்பேட்டை, சென்னை-600014. ஆர்.எஸ். நாராயணபாபு, 17/37, சீனிவாச பெருமாள் சன்னதி 2வது தெரு இராயப்பேட்டை, சென்னை-600014. வ. செல்வம், ஏ/19, திரு.வி.க.குடியிருப்பு, தேனாம்பேட்டை, சென்னை-600018. எஸ். சுரேஷ்பாபு, 25/9, குலான் அப்பாஸ் அலிகான் 7வது தெரு ஆயிரம்விளக்கு, சென்னை.

"அண்ணா அறிவாலயம்" **கார்த்திகேய சிவசேனாபதி,**
நாள் : 16-07-2025. செயலாளர்,
சென்னை - 18. தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

சேலம் கிழக்கு மாவட்டம் பனமரத்துப்பட்டி ஒன்றியம் பாரப்பட்டி பகுதியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் துவக்க விழாவில் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான எஸ்.ஆர்.சிவலிங்கம் கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதைப் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு உடனடித் தீர்வாக அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். விழாவில் மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்குமார், ஒன்றிய செயலாளர் உமாசங்கர், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.